1974 ஏப்ரல் 4]

Drug Testing Laboratory.

* 746 *Q.*—THIRU N. DENNIS :

* 745 *Q.*—THIRU N. K. PALANISAMY :

THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the steps taken by the Government to set up a Drug Testing Laboratory in this State; and

(*b*) the details of the financial commitments for this project?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) மருந்துச் சோதனை ஆய்வுக் கூடம் ஒன்றைக் கட்டுவதற்காக அரசு ரூ. 1 லட்சம் அனுமதி வழங்கி யுள்ளது. இந்த ஆய்வுக் கூடத்திற்கு தேவையான கருவிகளை வாங்குவதற் காக மேலும் ரூ. 1 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆய்வுக் கூடத்திற்குத் தேவையான கட்டிடங்கள், பணியாளர்கள், கருவிகள் ஆகிய வற்றிற்கான கூடுதல் செலவிற்கு ஒப்பளிப்பு வழங்கும் செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இது எங்கே கட்டப்படும், எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சென்னையிலே உள்ள நலத்துறை இயக்குநர் அலுவலக வளாகத்தினுள் இது கட்டப்பட வேண்டு மென்று கூறப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய் அளவிலே ‘ பைல் ஃபௌண் டேஷன் ’ போடவேண்டுமென்றும், ஒரு தளம் கட்ட 5 லட்சம் ரூபாய் தேவை என்றும் கூறப்பட்டதால் அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

Maternity Centres.

* 747 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state whether ‘ Ayahs ’ have been appointed in Maternity Centres and Sub Centres?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 2,348 ஆயாக்கள் தாய்சேய் நல மற்றும் துணை விடுதிகளில் பணி செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. என். டென்னிஸ் : இப்போது பஞ்சாயத்து யூனியன்களிலே இருக் கின்ற சில சப்-சென்டர்களில் ஆயாக்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ; சில சப்-சென்டர்களில் ஆயாக்கள் நியமிக்கப்படவில்லை. எல்லா சப்-சென்டர் களிலும் ஆயாக்களை நியமிக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?